வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்
ந.க.எண். 2695/அ3/2024, நாள். 12-09.2024

| | |
|---|---|
| பொருள்: | கற்றல் கற்பித்தல் பயிற்சி - 2024-2025ஆம் கல்வியாண்டு - அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகள் - கல்வியியல் படிப்பு பயிலும் மாணாக்கர்களுக்கு பயிற்சி வழங்குதல் - தொடர்பாக. |
| பார்வை: | சென்னை - 6, பள்ளிக்கல்வி இயக்குநரின் செயல்முறைகள், ந.க.எண். 038390/வி2/இ1/2024, நாள். 09.09.2024 |

---

பார்வை (1)இல் காணும் பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகளின்படி வேலூர் மாவட்டத்திலுள்ள அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் 2024-2025ஆம் கல்வியாண்டில் பி.எட்., எம்.எட். பயிலும் மாணாக்கர்களுக்கு 12.09.2024 முதல் 80 நாட்களுக்கு கற்பித்தல் பயிற்சி மேற்கொள்ள ஏதுவாக பள்ளிகள் ஒதுக்கீடு செய்து ஆணை வழங்கப்பட்டுள்ளது.

இவ்வொதுக்கீட்டில் தேவைப்படும் மாணாக்கர்களை விட கூடுதலாக உள்ள ஆசிரியர் பயிற்சி மாணாக்கர்களை அருகில் உள்ள நடுநிலைப் பள்ளிகளில் 6,7மற்றும் 8ஆம் வகுப்புகளுக்கு கற்றல் பயிற்சி மேற்கொள்ள சார்ந்த பள்ளித் தலைமையாசிரியர் அளவிலேயே நடவடிக்கை மேற்கொள்ளவும், மாணாக்கர்களை ஒதுக்கீடு செய்யப்பட்ட உயர்/மேல்நிலைப் பள்ளிகளுக்கும், அருகிலுள்ள நடுநிலைப் பள்ளிக்கும் இரு பிரிவுகளாகப் பிரித்து சுழற்சி முறையில் கற்றல், கற்பித்தல் பயிற்சியினை மேற்கொள்ளவும் பார்வையில் காணும் பள்ளிக் கல்வி இயக்குநர் அவர்களின் செயல்முறைகளில் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மேலும், கற்றல்/கற்பித்தல் பயிற்சிக்கென எந்த பள்ளிக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதோ அந்த உயர்/மேல்நிலைப் பள்ளிடத தலைமையாசிரியரே அவர்களுக்கு உரிய சான்றிதழ் வழங்க வேண்டும் என சார்ந்த உயர்/மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

இணைப்பு - பள்ளிகளின் பெயர்ப்பட்டியல்

//ஒப்பம் //
முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூர்.